# ஜனாதிபதியானதுமே புலிகளுடன் பேசுவேன்

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 24 இதழ் 279
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 10-11-1994

## சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)
ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதுமே விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தைகளை மேற்கொள்வேன்.

நேற்று ஜனாதிபதித் தேர்தலின் வாக்களித்தபின் பிரதமர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா இவ்வாறு தெரிவித்தார்.

அத்தனகல்ல தேர்தல் தொகுதியிலுள்ள சங்கபோதி வாக்களிப்பு நிலையத்தில்

(6-ம் பக்கம் பார்க்க)

குண்டு வெடிப்பில் காயமடைந்த

## ஓஸி நேற்று காலமானார்

(கொழும்பு)
கிராண்பாஸ் குண்டு வெடிப்பில் படுகாயங்களுக்குள்ளான ஸ்ரீ லங்கா மகாஜன கட்சியின தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஓஸி அபேகுணசேகர கொழும்பு பெரியாஸ்பத்திரியில் நேற்று பிற்பகல் காலமானார்.

காலஞ்சென்ற ஓஸிஅபேகுணசேகர மேல் மாகாண சபையில் எதிர்க்கட்சித் தலைவராகவும் கடமையாற்றியுள்

(5-ம் பக்கம் பார்க்க)

★ ஜனாதிபதித் தேர்தலில்

# சந்திரிகாவுக்கு வெற்றி உறுதி

# பல இடங்களில் கூடுதல் வாக்கு

## 60 வீதத்துடன் தொகுதிகளில் வெற்றி வாகை!

]கொழும்பு]
நேற்று நடை பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பொதுசன முன்னணி வேட்பாளரான பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க முன்னணி இடத்தைப் பெற்றுள்ளார். இன்று அதிகாலை 3 மணிவரை வெளியான முடிவுகளின்படி அவருக்கே கூடுதலான வாக்குகள் கிடைத்துள்ளன. அவரது வெற்றி பெருமளவு உறுதி செய்யப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

திருகோணமலை, நுவரெலியா, மாத்தறை, பதுளை, அநுராதபுரம், மொனருகலை, பொலநறுவ, சுண்டி, வன்னி, காலி ஆகிய மாவட்டங்களுக்கான தபால் மூல வாக்களிப்பு முடிவுகள் வெளியாகின. இந்த மாவட்டங்கள் அனைத்திலுமே சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவே பெருமளவு வாக்கு வித்தியாசத்தில் முன்னணி இடத்தைப் பெற்றுள்ளார்.

தொகுதி ரீதியான வாக்கெடுப்பில் பதுளை, மாத்தறை மிகிந்தலை. மாவத்தகம, தம்புல்ல ஆகிய இடங்களிலும் சந்திரிகாவே முதலிடத்தைப் பெற்றிருந்தார்.

இவருக்கு அடுத்தபடியான இரண்டாவது இடத்தையே ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரான திருமதி ஸ்ரீமா திசநாயக்கா பெற்றுர். (இ)



## தேர்தல் முடிவுகளை அமைதியாக ஏற்கவும்

— பிரதமர் வேண்டுகோள்

[கொழும்பு[
பொதுத் தேர்தல் முடிவுகளைப் போல் ஜனாதிபதி தேர்தல் முடிவுகளையும் அமைதியான முறையில் ஏற்றுக் கொள்ளுமாறு பிரதமமந்திரி சந்திரிகா பண்டாரநாயக்கா வானொலி மூலம் நேற்று நாட்டு மக்களுக்கு விடுத்த

(6-ம் பக்கம் பார்க்க)

## வடக்கில் ஏற்பட்ட யுத்தம் முடிவுக்கு வரவேண்டும்!

### — டி. பி. பிரியாவிடை உரை



[கொழும்பு]
வடக்கில் நடைபெற்று வரும் யுத்தம் ஒரு முடிவுக்கு வரவேண்டும் இதுவே எனது பிரார்த்தனை. மன உறுதியுடன் நின்றுஇந்தச் சவாலை வெற்றி கொள்ள வேண்டும்.

இவ்வாறு இலங்கையின் ஆட்சிப் பொறுப்பிலிருந்து விடை பெற்றுச் செல்லும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க நேற்றிரவு

(6ம் பக்கம் பார்க்க)

## இராணுவ அதிகாரி 3 சிப்பாய் பலி!

(கொழும்பு)
வெற்றிலைக்கேணி பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் நேற்றுக்காலை நடைபெற்ற மோதலில் ஒரு இராணுவ அதிகாரி உட்பட 4 படையினர்

(6ம் பக்கம் பார்க்க)

## இதுவரை கிடைத்த மொத்த வாக்குகள்

[கொழும்பு]
இதுவரை கிடைத்த முடிவுகளின்விபரம்

| | |
|---|---|
| சந்திரிகா | 12,41,383 |
| ஸ்ரீமா | 7,88,922 |
| ஹரிச்சந்திர | 3572 |
| கலப்பத்தி | 6901 |
| ரணசிங்க | 6732 |
| ஹட்சன் | 15,170 |

(சி-இ)

## ஊரடங்கு அமுல்

[கொழும்பு]
நேற்று இரவு 11-00 மணியிலிருந்து இன்று காலை 9-00 மணிவரையும் நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

மீண்டும் ஊரடங்கு சட்டம் இன்று பிற்பகல் 2-00 மணி

(6-ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

நாளை 11-11-94
வியாழ மாற்றம்

(மகரராசி) சந்திரிகாவுக்கு (11இல்) இலாப ஸ்தானத்திற்கு வியாழ மாற்றம் ஜனுதிபதியாக வெற்றியைக் கொடுக்கும். பாலாஜி புத்தகசாலை, யாழ்ப்பாணம். (நூலாசிரியர் : சத்யா)
(சி-1307)

## போக்குவரத்து கண்காணிப்பு

(அரியாலை)

யாழ். குடாநாட்டில் நடைபெறும் வீதி விபத்துக்களைக் குறைப்பதற்காகவும் வீதி ஒழுங்குகளை மக்கள் பின்பற்றுமுகமாகவும் வீதிப் போக்குவரத்து காவலதுறையினா சந்திகள் தோறும் நின்று கண்காணிப்பு செய்து வருகின்றனர். (59)

## பாடசாலை அனுமதி

(ஆனைப்பந்தி)

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் அடுத்த ஆண்டு வகுப்புகளில் மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான அனுமதி பெறவிரும்புவோர் வித்தியாலய அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்படுகின்றது.

இவ்வித்தியாலயத்தின் ஆண்டு ஒன்று தொடக்கம் ஐந்து வரையான ஆரம்பநிலை வகுப்புகள் பிரப்பங்குளம் வீதியில் உள்ள தனியார்கல்வி நிலையம் ஒன்றிலும் ஏனைய வகுப்புகள் யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயத்திலும் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

# மாவீரர் நாள் மக்கள் முனைப்புடன் பங்கேற்கும் நிகழ்வாக வேண்டும்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மக்கள் மேற்கொண்டுவரும் விடுதலைப் போராட்டமானது. அறத்தின்பாற்பட்டது. மனித தர்மத்தின் அடிப்படையில் முன்னெடுக்கப்படுவது தேசிய சுதந்திரம் எனும் இலட்சிய வேட்கையைப் பிரதிபலிப்பது இக்குறிக்கோளை அடைய வழிகாட்டிகளாக தடைகளை அகற்றி விடுதலைப் பாதையைச் சீரமைத்துத் தரும் உருக்குப் போன்ற உறுதி கொண்ட மாவீரர்களது நினைவுகளை நெஞ்சத்திருத்தி, எம்மை மீளவும் அர்ப்பணிக்கும் வகையில் இவ்வருட மாவீரர் நாள், தமிழீழ மக்கள் அனைவரும் முனைப்புடன் பங்கேற்கும் நிகழ்வாகவிளங்க வேண்டும். இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மாவீரர் நாள் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் யாழ். மாவட்ட அரசியல் துறை விடுத்துள்ள பத்திரிகை குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''தேச விடுதலைக்காய் முற்றுகத் தம்மை அர்ப்பணித்து உயிரினை ஈய்ந்து உடலை உரமாக்கி, வரலாறு படைத்து தமிழீழ மண்ணெங்கும் தடம்பதித்து தேசத்தின்சோதியாக விடுதலை உணர்வில் தீப்பிழம்பாக ஒளி தருபவர்கள் மாவீரர்கள்,

தமிழீழ மக்களின் விடிவிற்காக வீரச்சாவு கண்ட மாவீரர்களை நினைவு கூர்ந்து எழுச்சி கொள்ளும். நவம்பர் 27ம்நாள் மாவீரர் நாள் ஆகும். இந்நாள் தமிழனுடையதேசியநாளாகவும், தமிழனுடைய வாழ்க்கையோடு ஒன்றிய பண்பாட்டு நாளாகவும்நிலைத்துநிற்கின்றது. தமிழனின் தொன்மையான பண்பு வீரத்தைப்போற்றுவது வீரத்திற்கு ஈகத்திற்கு தமிழன விழாவெடுக்கின்றான். அவன் சோகத்தில் தன்னைக் கரைத்து விடவில்லை: எனவேதான் இந்நாள் தேசிய நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வருட மாவீரர் நாளை உணர்வுகள் கரைபுரண்டு எழுச்சிகொள்ளும் வண்ணம், ஒழுங்கமைத்து, முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் முன்கூட்டியே வகுக்கப்படுகின்றது.

தமிழீழத்தின் கிராமிய அமைப்புகள், வெகுஜன அமைப்புகள். திட்டமிட்டு செம்மையாக செயற்படுத்த முனைப்புடன் தயாராகின்றன.

### மாவீரர் எழுச்சிவாரம்

நவம்பர் 15 முதல் 20 வரையிலான வாரம், மாவீரர் எழுச்சி வாரமாக துரிதசெயற்பாட்டு வாரமாக அனுஷ்டிக்கப்படுகிறது. மாவீரர் தூபிகள், உருவப்பட அமைப்புகள், இல்லங்கள், சாலைகள், ஒழுங்கைகள் சிரமானப்பணி மூலம் புதுப்பொலிவு பெறும், எங்கும் புனிதம் பொங்க வேண்டும். சிவப்பு, மஞ்சள் கொடிகளால் வீதிகள் அலங்கரிக்கப்படல் வேண்டும்.

### வளைவுகள் பதாகைகள்

போராட்ட வரலாற்றை, சம்பவங்களைக் கூறும் வளைவுகள், மாவீரர் புகழ்பாடும் வாசகங்களைத் தாங்கிய பதாகைகள் நிர்மாணிக்கப்படுதல் நவம்பர் 15-ம் திகதியன்று பூர்த்தியாகவேண்டும். வளைவுகள் குறைந்தது 22 அடிக்கு 18 அடி எனும் அளவுப்பிரமாணங்களைக் கொண்டு அமைக்கப்பெறல் வேண்டும். உணர்வுகளைத் தட்டி எழுப்பும் வாசகங்களுடன் கூடிய சுவரொட்டிகளும் 15 திகதிக்கு முன்னர் ஒட்டப்படல்வேண்டும்.

### கருத்தரங்குகள் வீதிநாடகங்கள்

மாவீரர் நிகழ்வுகளில் மக்களை உணர்வுபூர்வமாக, முழுமையாகப் பங்கேற்க கருத்துக்களை வெளியிடும் கருத்தரங்குகள், எழுச்சி வீதி நாடகங்கள் வெகுஜன அமைப்புக்களால் ஒழுங்கமைக்கப்படவேண்டும்.

மாவீரர் நாளின் முக்கியத்துவத்தை உணர்த்தித் தயார்படுத்துவதுடன் மாவீரர் எழுச்சவாரம் நிறைவுறும்.

### மாவீரர் வாரம்

தனக்கென வாழாது, மற்றவர்களுக்காக வாழும் உயரிய பண்பை, முன்னுதாரணமாக வாழ்ந்து கட்டி வித்தாகியதன் மூலம் தமிழீழத்தில் முழுமையான மனிதனின் உருவாக்கத்தில் பெரும்பங்கு வகிக்கின்ற மாவீரர்களது ஒளியூட்டலில், தமிழீழம் முழுவதும் எழுச்சி கொண்டு விடுதலைக் கீதங்கள் ஒலிக்க, எங்கும் அஞ்சலி நிகழ்வுகள் மாவீரர் வாரமாகிய நவம்பர் 21 முதல் 27 வரை இடம்பெறும். இவ்வாரத்தில் தேவையற்ற களியாட்டங்கள் தவிர்க்கப்படல் வேண்டும். தமிழீழ மக்கள் ஒரே நோக்கில் செயற்படுவர்.

### தேசியக்கொடி ஏற்றல்

மாவீரர் வார முதல் நாளாகிய நவம்பர் 21ம் நாள் காலை 9 மணிக்கு 22 அடிக் கம்பத்தில் எமது குறிக்கோளைக் சுட்டி நிற்கும், எமது தேசியக் கொடி, திணைக்களங்கள், வங்கிகள், கூட்டுத்தாபன அலுவலகங்கள், பாடசாலைகள், பொது நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள், தொழிற் சங்கங்கள், மாதர் அபிவிருத்திக் கழகங்கள் ஆகியவற்றில் ''ஏறுதுபார் கொடி ஏறுது பார்'' என்ற பாடல் இசைக்க ஏற்றப்படும். தேசியக்கொடி பெற விரும்புபவர்கள் 19ம் திகதிக்கு முன்னர் கோட்ட, வட்ட அரசியல்துறைப் பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

### மரியாதை வணக்கம் செலுத்துதல்

மாவீரர் வார நாட்களில், சனசமூக நிலையங்களில், பாடசாலைகளில், பொது அமைப்புகளின் அலுவலகங்களில், மற்றும் ஏனைய நிறுவனங்களில் மாவீரர்களது உருவப்படங்கள் பந்தலிட்டு வைக்கப்பட்டு புனிதமாக அலங்கரிக்கப்பட்டு மலரிடப்பட்டு மரியாதை வணக்கம் செலுத்துவர். மேலும் வட்ட ரீதியாகச் சிறப்புற அமைக்கப்படும் மாவீரர் பந்தல்களில் வைக்கப்பட்டுள்ள மாவீரர் உருவப்படங்களுக்கு தமது உளந்தோய்ந்த வணக்கத்தைச் செலுத்துவர்.

### நினைவு நிகழ்ச்சகள்

மாவீரர் வாரத்தின்போது, மாவீரர் வீரவணக்கக் கூட்டங்கள், மாவீரர் மேன்மையை எடுத்தியம்பும் கலை நிகழ்வுகள், கவிதை அரங்குகள் பொது அமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பெறும்.

### நினைவு ஒலி எழுப்பல்

நவம்பர் 26ம் நாள் நள்ளிரவு தாண்டும் வேளையில் தமிழர் தேசிய நாளாம் 27ம் நாள் உதயமாகும்போது ஆலயமணிகள் சரியாகப் 12 மணி ஒரு செக்கனுக்கு மாவீரர் நினைவு ஒலி எழுப்ப, எம்மினிய மக்கள் எல்லோரும் எழுந்து நின்று 2 நிமிட மௌன வணக்கம் செலுத்தி 12 மணி 2 நிமிடத்துக்கு நிறைவு செய்வர். (இச் சந்தர்ப்பத்தில் நடந்து செல்பவர்கள், வாகனங்கள், இயங்கும் அனைத்தும் தரித்து அமைதியாகி மௌன வணக்கத்தில் ஆழ்ந்து பங்கேற்பர்.)

### சுடரேற்றுதல்

மாவீரர் நினைவொலி நிறைவு பெற மாவீரர் சுடரேற்றல் நிகழ்வு தொடரும். மாவீரர் துயிலுமில்லங்களில் பொது இடங்களில், பணிமனைகளில், பாடசாலைகளில், இல்லங்களில், வணிக நிலையங்களில் மக்கள் திரண்டு உணர்வு கொப்பளிக்க மாவீரரை நினைவிலிருத்தி நெய் விளக்கேற்றுவர்.

### பொதுக்கூட்டம்

மாவட்ட ரீதியாக மாவீரர் நினைவுப் பொதுக்கூட்டம் இடம்பெறும். பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள தமிழீழ மக்கள் திரண்டு வருவர். 27-ம் நாள் 5-00 மணிக்கு மாவீரர் நிகழ்வுகள் தேசியக் கொடி இறக்கப்படுவதுடன் நிறைவுபெறும். (ரி)

60—வது பிறந்ததினம்



அமரர் பேராசிரியர்
அ. துரைராசா
[ முன்னாள் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் ]

யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தில்
10 – 11 – 1994 [ இன்று ] வியாழக்கிழமை
பகல் 10 மணியளவில்
அமரர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களின்
★ 60–வது பிறந்தநாளையொட்டி ★
1008 சங்காபிஷேகம்
நடைபெறவுள்ளது.

★ அனைவரையும் இவ் அபிஷேக வைபவங்களில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
ச. க. தனேந்திரன்,
தலைவர்.

யாழ். பல்கலைக்கழக
ஊழியர் சங்கம்.

(ஏ-4490)

## ஆண்டு 1 அனுமதிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவிலிருந்து இடம் பெயர்ந்து தற்பொழுது யாழ்ப்பாணம் கில்னர் வீதியில் இயங்கிக்கொண்டிருக்கும் புங்குடுதீவு அ. மி. த. வித்தியாலயம் 1995ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ம் திகதியுடன் ஐந்து வயது பூர்த்தியான குழந்தைதளை ஆண்டு - 1 வகுப்பு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்து தற்பொழுது யாழ் நகரில் வதியும் குழந்தைகள் ஆண்டு ஒன்று வகுப்புக்கு அனுமதி பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம், ராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், பெற்றோரை இழந்து வளம் குன்றிய பிள்ளைகளுக்கும் இப்பாடசாலை அபிவிருத்திச் சங்கமும். பழைய மாணவர் சங்கமும் இணைந்து வசதிகளை வழங்கவுள்ளனரென இப்பாடசாலை அதிபர் திரு. பூராசா தெரிவித்தார். (162)

## மாவீரர் நினைவுநாள் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி, பளைப் பிரதேசங்களைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் இன்றுமாலை 3-00 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கர சுவித்தியாலயத்தில நடைபெறும். அனைத்து கிராம உத்தியோகத்தர்களும் தவறாது கலந்துகொள்ளும்படி தமிழீழ நிர்வாக சேவையினர் கேட்டுக்கொள்கின்றனர்.

## யாழ். நகரில் கருவாடு விற்பனை

(அரியாலை)

யாழ்.நகரில் மீண்டும் கருவாடு விற்பனை நடைபெற்று வருகின்றது. தரமான கருவாடுகள் கொழும்பு, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களிலிருந்து வந்துள்ளன. யாழ். நகரில் சந்தைகளிலும் கடைகளிலும் நெத்தலி, பாரை, கலவாய்போன்ற கருவாடுகள் கிலோ 100 ரூபாவாகவும் சூடை கிலோ 30 ரூபாவாகவும் விற்கப்படுகின்றது. -59

## மழையினால் விபத்துக்கள் அதிகரிப்பு

(அரியாலை)

யாழ். குடாநாட்டில் தற்பொழுது பெய்துவரும் மழையினால் வீதிகள், ஒழுங்கைகள் யாவும் பள்ளங்கள் விழுந்து சேறும் சகதியுமாக காணப்படுகின்றன. நாளாந்தம் இதனால் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன. -59

## திருடர் தொல்லை

(நெல்லியடி)

புலோலி தெற்கு வல்லிபுரக் குறிச்சிப் பகுதிகளில் இரவு வேளையில்திருடர்கள்தொல்லை அதிகரித்துள்ளது.

மழை காலங்களை தமக்குச் சாதகமாக்கும் திருடர் கூட்டம் கோழிக் கூட்டுடன் கோழிகளையும், சமையல் கூடத்தில் மிளகாய்த்தூள் முதற்கொண்டு உப்பு ஈறுக அனைத்தையும் களவாடிச் செல்கின்றனரென அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (60)

இலங்கை

# அரசியலின் தலைவிதி விதவைகள் கையில்

இலங்கை அரசியலின் தலைவிதி இன்று விதவைகளின் கையிலேயே தங்கியிள்ளது.

எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, விஜய குமாரணதுங்கா, லலித் அத்துலத்முதலி, ஆர். பிரேமதாசா, காமினி திஸாநாயக்கா ஆகிய ஐவரும் இலங்கையின் அரசியலில் முடிசூடா மன்னர்களாகத் திகழ்ந்தார்கள். ஆனல் இந்த ஐவருமே வன்செயல்களினல் படுகொலை செய்யப்பட்டார்கள்.

1959 ம் ஆண்டு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, பிரதம மந்திரியாக இருக்கும் போது துப்பாக்கிச் சூட்டுக்கு பலியானர். விஜய குமாரணதுங்கா நடிகராக இருந்தபோதிலும் மக்கள் மத்தியில் மிகவும் செல்வாக்கு பெற்றவராக திகழ்ந்தார். இதனல் அவர் ஜனதிபதித் தேர்தலில் போட்டியிட முற்பட்டபோது 1989-ம் ஆண்டு துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானர்.

அத்துலத்முதலி அமைச்சராக இருந்தபோது முப்படையினர் மத்தியில் மதிப்பு பெற்றவராக இருந்தார். ஐ. தே. கட்யிசிலிருந்து விலகி புதிய கட்சியை ஆரம்பித்தபோது 1992-ம் ஆண்டு வெடிகுண்டுக்குப் பலியானர். இலங்கையின் 2-வது ஜனதிபதி என்ற பெருமையுடன் இரும்பக்கூட்டுக்குள் ஆட்சி செலுத்திவந்த ஆர். பிரேமதாசாவும் 1992ம் ஆண்டு மே மாதம் 1-ம் திகதி வெடிகுண்டிற்குப் பலியானர்.

இளம் வயதினிலே இலங்கையின் அரசியலில் புகழ் பெற்ற ஒருவராகத் திகழ்ந்த காமினி திஸாநாயக்காவும், ஜனதிபதியாக வர ஆசைப்பட்டு ஈற்றில் அண்மையில் வெடிகுண்டுக்குப் பலியானர்.

வன்செயல்களுக்குப் பலியான மேற்படி ஐவர்களினதும் விதவை மனைவிமார் இன்று இலங்கை அரசியலில் தத்தமது கணவன்மார் விட்டுச் சென்றபணிகளை நிறைவேற்றி வருகின்றார்கள்.

எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காஇறந்தபின் அவரின் மனைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, பிரதமராக தெரிவு செய்யப்பட்டதுடன் உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமையையும் பெற்றர்.

குமாரணதுங்கா இறந்து சில கால இடைவெளிக்குப் பின் அவரின் மனைவியும், பண்டாரநாயக்கா-ஸ்ரீமாவோ தம்பதிகளின் மூத்த மகளுமான திருமதி சந்திரிகா அரசியலில் பிரவேசித்து தற்போது பிரதமராக இருக்கின்றர்.

## ''தேவா''

ஜனதிபதி தேர்தலில் இவர் வெற்றி பெற்றல் உலகிலேயே முதலாவது பெண் ஜனதிபதி என்ற பெருமையும் பெற்று விடுவார்.

அத்துலத்முதலி உயிருடன் இருந்த காலத்தில் ஐ. தே. கட்சியும் - ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் இரு துருவங்களாகவே இருந்தன.

அத்துலத்முதலி இறந்ததும் அவரின் மனைவியான ஸ்ரீமானி தற்போதைய சந்திரிகா அரசுடன் இணைந்து அமைச்சராகியும் விட்டார்.

முன்னள் ஜனதிபதி ஆர். பிரேமதாசா இறந்தவுடன் அவரின் மனைவியான ஹேமா பிரேமதாஸாவை அரசியலில் முக்கிய பதவிகளை வகிப்பதற்கு ஒரு சாரார் முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் அது நிறைவேறது போய்விட்டது. ஆனலும் அவர் தற்போது ஐ. தே. கட்சியின் கொழும்பு அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்போது திரு. காமினியின் இறப்புக்குப் பின்பு அவரின் மனைவியான சட்டத்தரணி ஸ்ரீமா திஸநாயக்காவை ஐ. தே. கட்சி ஜனதிபதி வேட்பாளராக நிறுத்தியுள்ளது.

இன்று இலங்கை அரசியல் வானிலே ஒளிவீசிக்கொண்டிருக்கும்இந்த ஐந்து விதவைகளில் சிறந்த அரசியல்ஞானம் பெற்றவராகத் திகழ்பவர் தற்போதைய பிரதமர் திருமதி சந்திரிகா தான். இவர் தனது தந்தை-தாயின் மூலமும்பிரான்ஸ் பல்கலைக்கழ கழகங்களில் அரசியல் பட்டம் பெற்றதன்மூலமும்சிறந்த அரசியல் ஞானம்பெற்று தற்போது அரசியல் சாணக்கியராகத் திகழ்கின்றர்.

அடுத்தபடியாக திருமதி ஸ்ரீமானி அத்துலதமுதலியைக் கூறலாம்.

இவர் திரு. அத்துலத்முதலியை திருமணம் செய்வதற்கு முன்பே ஐ. நா. சபையின் அரசியல் பிரிவில் உயர் பதவிகளை வகித்தவர். முன்னள் ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் உறவினரான இவர் அரசியலில் பட்டம் பெற்றவர்.

தற்போது ஐ. தே. கட்சியின் ஜனதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டவர் திருமதிஸ்ரீமா திஸநாயக்கா சட்டத்தரணியான இவர் தனது கணவரான திரு. காமினியின் மூலம் அரசியலைப் பற்றி அறிந்து கொண்டவர். —விரி

# தேசியத்தை வளர்ப்பதில் தலைவர் குறியாக இருக்கிறர்

(உடுவில்)

''சகல தமிழ் மக்களும்தமது நிரந்தர சேவைகளை நிறைவாகப் பெறவேண்டும் எமது மண் பல சோகவரலாறுகளைப் படைத்துள்ளது. எமது கல்வி மொழி, பணபாடு, இனம் ஆகியவற்றை நான்கு தூண்களாக்கி தேசியத்தை கட்டி வளர்ப்பதில் எமது தலைவர் குறியாக இருக்கின்றர்'' இவ்வாறு தமிழீழ கல்விமேம்பாட்டு பேரவையைச் சேர்ந்த திரு. அருண் மாஸ்டர் தெரிவித்தார்.

உடுப்பிட்டி இமையாணன் மகாவித்தியாலய கலைத்தென்றல் நிகழ்வுகளில் பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது:

கல்வி நிலையில் ஏற்பட்டுள்ள சோர்வுநிலை பின்னடைவு ஆகியவற்றை சீர் செய்ய கல்விப்பணிகள் பல செய்து, முன்னேடி முதனிலை இளநிலை தேர்வுகளை நடாத்தி வருகிறேம்.

கலை நிகழ்வுகளாக ஆபாச நிகழ்வுகளை தவிர்த்து எமது பாரம்பரிய கலாசாரங்களை பேணும்வகையில் எமது கலைஞர்கள் பங்குபற்றும் நடனம், நாடகங்களை வளர்த்துவருகிறேம்.

எமது தேசிய தலைவரின் வழிநடத்தலில் மலரப்போகும் தமிழீழத்தில் முற்றிலும்தமிழ் மணம் வீசும் கலாசார பண்பாட்டு பாரம்பரியங்களைக் கொண்ட சமுதாயம் ஒன்று வாழப்போவது உறுதி எனக் கூறினர். -109-ரி

# நுளம்பு பெருக்கத்தால் மலேரியா பரவலாம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மலேரியா நோய் மீண்டும் அதிவேகமாகப் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அண்மைக்கால மழையினல்நுளம்புகளின் பெருக்கம் ஏற்பட்டு மலேரியா நோய் அதிகரிக்கலாமென அஞ்சப்படுகிறது.

தென்மராட்சி, பச்சிலைப் பள்ளிப் பகுதிகளில் கடந்த மாதத்தில் மட்டும் 345 பேர்கள் மலேரியா காய்ச்சல் நோயினல் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

இவர்களில் நான்கு பேர் மூளை மலேரியாவினல் பீடிக்கப்பட்டுள்ளதாக ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. -154

பிறப்புசான்றிதழ்

# விண்ணப்பங்கள் ஏற்பது இடைநிறுத்தம்

(கொழும்புத்துறை)

யாழ். செயலக பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் திணைக்களம் கடந்த 1954-ம் ஆண்டிற்குப்பின் பிறந்தவர்களுக்கான இருபக்கம் உள்ள பிறப்புச் சான்றிதழ் பெறுவதற்குரிய எழுதும் படிவம் முடிவடைந்துள்ளதால் இச்சான்றிதழ் பெறுவதற்கு விண்ணப்பம் செய்வோரின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வது மறுஅறிவித்தல் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 1954-ம் ஆண்டிற்கு முன்னர் பிறந்தவர்களுக்கான ஒரு பக்கப் பிறப்புச் சான்றிதழ் பெறுபவர்களுக்கான விண்ணப்பம் மட்டும் தற்போது ஏற்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுசிறது.

இதேவேளை குடும்பப்பதிவு அட்டை பெறுவதற்கு விண்ணப்பம் செய்வோரின் விண்ணப்பங்கள் ஏற்கப்படும் என்றும் இதனைப் பெற விண்ணப்பம் செய்வோர் விண்ணப்படிவத்தில் ''குடும்ப அட்டை'' பெற எனக் குறிப்பிடப்படவேண்டும் என்றும் அறியப்படுகிறது -154

கிராமிய மேம்பாட்டு திட்ட

# உதவிகளை பயனளிகள் நன்கு பயன்படுத்த வேண்டும்

(உடுவில்)

கிராமிய மேம்பாட்டுத்திட்டத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டு வரும் உதவிகளை பயனளிகள் நல்லமுறையில் பயன்படுத்தவேண்டும். கிராமிய மேம்பாட்டு வளர்ச்சியை நோக்காக கொண்டு ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளுக்கும் அறுபதாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

கிராமிய மேம்பாட்டு திட்டத்தின்கீழ் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன்கந்தரோடை கிராமத்தில் ஆடுவளர்ப்புக்கென ஒன்பது பயனளிகளுக்கான நிதி வழங்கும் வைபவத்தில் உரையாற்றிய வலிகாமம் தெற்கு பிரதேசசபை திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் திரு. த. தேவராஜன் மேற்கண்டவாறு கூறினர்.

கந்தரோடை மேற்கு ஞானவைரவர் சனசமூக நிலையத்தில் வைத்து ஒன்பது பயனளிகளுக்கு தலா ஐயாயிரம் ரூபா ஊக்குவிப்புகடன் வழங்கப்பட்டது.

அவர்மேலும் கூறியதாவது; குளங்கள், கால்வாய்கள் புனரமைப்பு, வீதிகள் அமைத்தல் கட்டுமான வேலைகள், கோழி, ஆடு மாடு, வளர்த்தல் போன்ற பல்வேறு தேவைகளுக்காக இவ்வுதவி வழங்கப்படுகின்றது. கிராமசேவையாளர்கள் தமது பிரதேச சூழலுக்கேற்ற தொழில் வாய்ப்புக்களுக்கு இக்கடனுதவியை பெற்றுக் கொடுக்கிறர்கள். இதனை நல்ல முறையில் பயன்படுத்தி கிராமத்தின் வளர்ச்சிக்கும் பொருளாதார விருத்திக்கும் ஒவ்வொரு பயனளியும் பங்காற்றவேண்டும் என்றர். (109)

## 'விளக்கு, வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

''விளக்கு'' ஆவணி-புரட்டாதி-ஐப்பசி உலக ஆசிரியர் நாள் சிறப்பிதழ் வெளிவந்துள்ளது.

அகில உலக ஆசிரியர் நாள். ஆசிரியர் தினம், சிறுவர் நாடக அரங்கும் சிறுவர் ஆளுமை வளர்ச்சியும், நமது அதிபர், வடதமிழீழ பெருநிலப்பரப்பில் விளக்கு எங்கள் ஆசான், பாடசாலை நிர்வாகத்தில் பணிவும், துணிவும், தமிழ் மொழி கலை பண்பாட்டு எழுச்சி விழா, இளைப்பாற்றுச் சம்பளத்திட்டம், குணப்பண்பும் ஆளுமையும், குழந்தையின் கல்வி வளர்ச்சியில் பெற்றேரும் ஆசிரியரும், கல்விச் சுற்றுலா நீங்களும் நாங்களும் ஆகிய விடயங்களைத் தாங்கி விளக்கு இதழ் வெளிவந்துள்ளது. (ரி)

# கற்பித்தல் நிகழ்வுகள் சீராக நடைபெற ஏற்பாடு

(உடுவில்)

பாடசாலைகளில் கற்பித்தல் நிகழ்வுகள் சீராக நடைபெறுவதற்கான நடவடிக்கைகளை உடுவில் கல்விக்கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா மேற்கொண்டுள்ளது.

பாடசாலை நடைபெறும் நேரங்களில்எந்தவொரு ஆசிரியரும் கல்விக்கோட்டத்துக்கு வருகைதரக்கூடாது எனஅவர் தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்காக அதிபர்கள் ஆசிரியர்கள் முயன்று வரும் இக்காலத்தில் பாடசாலை நேரத்தில் அதிபர்களோ ஆசிரியர்களோ எந்த அலுவலையும் முன்வைத்து கல்விக கோட்டத்துக்கு வருகை தரக்கூடாது. பாடசாலை முடிந்த பின்னரே வரவேண்டும் என அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

அதிபர்கள் நிர்வாகவேலைகளுடன் வகுப்பறைக்கற்பித்தலிலும் குறிப்பிடத்தக்க மணித்தியாலம் வேலைசெய்ய வேண்டும்.

மாணவர்கள் முழுமையான வகுப்பறைக்கல்விபெற வாய்ப்பளிக்கவேண்டும் எனவும் திரு. இரத்தினராசா தெரிவித்துள்ளார். -109

# தென்பகுதியில் மட்டுமல்ல வடக்கிலும் அமைதி தேவை

(கொழும்பு)

தென்பகுதி மக்களுக்கு மாத்திரமல்ல வடபகுதி மககளுக்கும் சமாதானம் தேவைப்படுவதாக அருட்திரு. எஸ். எம். இம்மானுவேல் அடிகள் தெரிவித்தார்.

கொழும்பு இந்துக்கல்லூரியில் இலங்கையின் சமாதானம் நிலவவேண்டியதன் அவசியம் குறித்து நடாத்தப்பட்ட கருத்தரங்கில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

முன்னள் ராஜாங்க அமைச்சர் பி பி. தேவராஜ் தெரிவிக்கையில்;

இனப்பிரச்னை தீர்வு குறித்து அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு சகலரும் பூரண ஒத்துழைப்பு நல்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் பல்வேறு முனைகளிலும் சமாதான சக்திகள் செயற்பட்டு வருவதாகவும் கடந்த ஆகஸ்ட் மாதத்திலிருந்து நாட்டில் புதிய யுகம் ஒன்று உருவாகிவிட்டதாகவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

கல்விமான்கள், மதகுருமார் ஒவ்வொரு துறையிலும் சிறப்பு தேர்ச்சிபெற்றேர்பலர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்சுது. -க-ரி

## வாழ்க்கைத்திறன் கல்வி நிலையம்

(ஆனைப்பந்தி)

நாவற்குழி லவனிதா குடியிருப்பில் எழுத்தறிவற்றேருக்கு அதனை புகட்டும் நோக்குடன் 'வாழ்க்கைத்திறன் கல்வி நிலையம்' ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது,

குடியிருப்பில் உள்ள சிறுவர் போஷாக்கு பராமரிப்பு பூங்காவில் அமைந்துள்ள இந்நிலையம் சென்ற வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாக திறந்துவைக்கப்பட்டது. -101

# சிறைக் கைதிகள் விடுவிக்கப்பட்டமையாலேயே காமினி படுகொலை செய்யப்பட்டார்

## — முகமட் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளை விடுதலை செய்ய வேண்டாம் என பொலிசாருக்கும் படையினருக்கும் கடிதம் அனுப்பியிருந்தேன் என முன்னாள்சபாநாயகர் எம். எச். முகமட் 'சண்டே ரைம்ஸ்'க்கு தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்; காமினி கொலை குறித்து விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டால மேலதிக விபரங்கள் கிடைக்கும்.

காமினியின் கொலை குறித்து எந்த அடிப்படையில் விசாரணைக் கமிஷன் அமைக்கவேண்டுமெனக் கோரியிருக்கிறீர்கள் எனக்கேட்டபோது, முதலில் சிறையிலிருந்து விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் விடுதலை செய்ததாகும். இதில் சிலர் தீவிர புலிகள். இன்னும் சிலர் தற்கொலைப் படையினர் என படை வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது. இந்த நபர்களை விடுதலை செய்ய இராணுவமும் பொலிசாரும் உடன்பட்டிருக்கக் கூடாதென நினைக்கிறேன். மேலும் கொழும்பில் லொட்ஜ்களிலும் வீடுகளிலும் நடைபெற்ற தேடுதல் நடவடிக்கையும் நிறுத்தப்பட்டது. இது அவர்களுக்கு சுலபமான வழியை அமைத்தது.

இதுவரை எமது தலைவர்களில் எவ்வளவு பேரை இழந்துவிட்டோம். தேடுதல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதால் தீவிரவாதிகள் கொழும்பு நகரினுள் ஊடுருவக்கூடியதாக உள்ளது சிறையிலிருந்த 200 பேரை விடுதலை செய்து பின் கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பின் பின்னர் 50 பேர் மீண்டும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இது எவ்வளவு மடைத்தனம்.

நாம் மிகப்பெரிய தலைவர் காமினியை இழந்துவிட்டோம். அவர் நிச்சயம்ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றுப்பார். விடுவிக்கப்பட்டவர்களை மீண்டும் கைது செய்வதால் காமினியோ அல்லது கொல்லப்பட்டவர்களோ மீண்டும் உயிருடன் வந்துவிடுவார்களா!

காமினியின் கொலைக்கு விடுதலைப் புலிகளும் அரசும்தான் காரணமெனக் கூற உங்களிடம் போதிய ஆதாரங்கள் உண்டா எனக் கேட்டபோது, அரசு விசாரணையை நடத்தினால் அவர்கள் உண்மையை அறிவார்கள். சிறையிலிருந்து விடுதலைப் புலிகளை விடுதலை செய்தமை, அவர்கள் அரசுடன் சேர்ந்து இரகசிய திட்டம் தீட்டியிருக்கலாமென நாங்கள் நினைக்கலாம்தானே?

விசாரணைகள் ஆரம்பமாகட்டும். பிறகு சாட்சியங்கள் எல்லாப் பக்கத்திலிருந்தும் வரும். இவர்களை விடுதலை செயவதற்கு நான் சம்பந்தப்பட்ட தரப்பிற்கு எனது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தேன். ஏன் இந்த நேரத்தில் அவர்களை விடுதலை செய்தார்கள்? தற்போது தேர்தல் நடக்கும் நேரமல்லவா? நவம்பர் 9ம் திகதியின் பின்னர் விடுதலை செய்திருக்கலாம்.

காமினியின் கொலைக்கு அரசும்-புலிகளும் சேர்ந்து செய்த சதியே காரணமென நீங்கள் கூறியதை, அது உங்களது தனிப்பட்ட கருத்தே ஒழிய ஐ. தே. க.வின் கருத்தல்ல என கட்சியின் இணைச்செயலாளர் திரு. மகிந்த சமரசிங்க கூறியுள்ளாரே எனக் கேட்டபோது,

இந்த விடயம்பற்றி பேச அவருக்கு உரிமையில்லை. இப்படியான அறிக்கைகள் கட்சிக்குப் புகழை சேர்க்காது. அவர் யார் கட்சிபற்றிப் பேச எனவும் முகமட் வினு எழுப்பினார்.

விடுதலைப் புலிகள் எனக் கூறி தமிழ் மீனவர்களை அரசு விடுதலை செய்ததும் அதற்குப் பதிலாக விடுதலைப் புலிகள் தாம் பிடித்து வைத்திருந்த 9 மீனவர்களை விடுதலை செய்ததும் இது குறித்து 'ராவய' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன், அரசு விடுதலைப்புலிகள் எனக் கூறி மீனவர்களை விடுதலை செய்வதால் தமிழர்களை ஏமாற்ற முயல்கிறது எனக் குற்றம் சாட்டியதும் குறிப்பிடத்தக்கது. (சிறி)

---

## பி. பி. சி. தொலைக்காட்சி செய்தி இருட்டடிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் சம்பந்தமான பி. பி. சி.யின் தொலைக்காட்சி செய்திகள் இருட்டடிப்புச்செய்யப்பட்டதாக பி. பி சி.யின் தென்கிழக்காசிய சேவை நேற்று தெரிவித்தது,

தேர்தல் சம்பந்தமான பி, பி. சி.யின் செய்திகளை தேர்தல்ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா. தணிக்கை செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

முறைப்பாடுகள் எதுவும் வருவதைத் தடுப்பதற்காகவே தாம் பி. பி. சி. செய்திகளை தணிக்கை செய்ததாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார் எனவும் தென்கிழக்காசிய சேவை தெரிவித்தது. (இ)

---

## அதிபர் பிரதி அதிபர் பகுதி தலைவர் நியமனங்கள்

(உடுவில்)

பாடசாலைகளில் அதிபர், பிரதி அதிபர், உதவி, பகுதி தலைவர்களை நியமனம் செய்யும் சந்தர்ப்பங்களில் நியமமிக்கப்படும் பாடசாலையில் உள்ள அதிபர் சிரேஷ்டத்துவத்தை மீறுத வண்ணம் தேவையான பதவிகளுக்கு நியமனம் செய்யவேண்டுமென சகல கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் கல்விச் சேவை சபையின் செயலாளர் திரு, ஏ, எஸ். வீரரத்ன அறிவுறுத்தியுள்ளார்.

தேசிய பாடசாலைகளின் அதிபர்கள்இலங்கை கல்வி நிர்வாக சேவை !, I பிரதி அதிபர்கள் -இலங்கை கல்வி நிர்வாக சேவை II, III உதவி அதிபர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவை III அதிபர் I, பகுதி தலைவர்கள் அதிபர் I தரங்களை சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும்.

1 ஏ பி பாடசாலைகளின் அதிபர்கள் கல்விச்சேவை II, 11 பிரதி அதிபர்கள் கல்வி நிர்வாக சேவை III அதிபர் I. உதவி அதிபர்கள் அதிபர் I, அதிபர் II, பகுதி தலைவர்கள் அதிபர் II, 111 தரங்களை சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும்.

1 - சி பாடசாலைகளின் அதிபர் இலங்கை கல்வி நிர்வாக சேவை 111 அதிபர் 1, பிரதி அதிபர்கள் அதிபர் I, II, உப அதிபர்கள் அதிபர் II, I பகுதி தலைவர்கள் அதிபர் III தரங்களை சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

2ம் தர பாடசாலை அதிபர் 11, பிரதி அதிபர்கள் அதிபர் 11, 111 பகுதி தலைவர்கள் அதிபர் 111 தரங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும்.

3ம்தர பாடசாலைஅதிபர்கள் - அதிபர் 111, பிரதி அதிபர்கள் அதிபர் 111, பகுதி தலைவர்கள் அதிபர் 111 தரங்களை சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும் எனவும் திரு. வீரரத்தின அறிவித்துள்ளார். 109

---

## ஊனமுற்றோருக்கு பயிற்சி

(யாழ்ப்பாணம்)

ஊனமுற்றோருக்கு உதவும் நோக்குடன் இறைச்சிக்கோழி வளர்ப்பு பற்றிய பயிற்சி யாழ் ஊனமுற்றோர் புனர்வாழ்வு சங்கத்தினால் நடாத்தப்படுகிறது.

இப்பயிற்சியை பெறவிரும்பும் ஊனமுற்றவர்கள் சுண்டுக்குளி, கொழும்புத்துறை வீதியில் 16இல் இருக்கும் பணிமனையில் நேரிலையாகவோ, கடித மூலமாகவோ விண்ணப்பிக்குமாறு கேட்கப்படுகிறது. க-ரி

---

## கிராம சேவகர்கள் பதவி உயர்வு

(கொழும்புத்துறை)

தென்மராட்சி பிரதேச செயலகத்தில்கடமையாற்றும் ஏழு கிராம அலுவலர்கள் தரம் ஒன்றுக்கு தகுதிபெற்றுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண பொதுநிர்வாக பிரதிப் பிரதம செயலாளர் திரு. அ, ச, பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

---

## வதுவில் குளம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் பகுதியிலுள்ள வதுவில் குளத்தை புனரமைக்கும் பணியினை யாழ்.மாவட்ட தேச நிர்மாணிகள் தற்போது மேற்கொண்டு வருகின்றனர், இப்புனரமைப்பு வேலைகளில் தற்போது குளம் ஆழமாக்கப்பட்டு வெள்ளரிப்பினால் பாதிக்கப்பட்ட அணைக்கட்டுகளும் வலுவூட்டப்பட்டு வருகின்றது.

கமநல சேவை திணைக்கள நிதியினைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கை மூலம் இக்குளத்தினைக் கொண்டு நீர்ப்பாசனம் செய்யும் விவசாயிகள் பலர் நன்மையடையவுள்ளனர்.

---

## சமய தீட்சை

(கொழும்புத்துறை)

ஐப்பசி மாதக் கடைசிவெள்ளிக்கிழமை நாளை 11ம் திகதி காலை 8 மணிக்கு 'சைவப் மணிமனை'' இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர்சபை மண்டபத்தில் சமய தீட்சை நடைபெறவுள்ளது.

இத்தினத்தில் சமயதீட்சை பெற விரும்புவோர் சபையினருடன் நேரிற் தொடர்பு கொள்ளுமாறு சபையின் தலைவர் திரு. நா. கிருபாகரன் அறிவித்துள்ளார். 154

---

# யாழ். மாவட்டத்தில் தொற்று நோய்கள் பரவும் அபாயம்

### சுகரதாரப் பகுதி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சுகாதாரம் பேணப்படவேண்டுமென யாழ். மாவட்டச் சுகாதாரப் பகுதியினர் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்பொழுது மழைகாலமானதால் மலேரியா, வாந்திபேதி போன்ற தொற்று நோய்கள் பரவலாமென சுகாதாரப் பகுதியினரால் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

மழை காலத்தில் நுளம்பின் பெருக்கம் வேகமாகப் பரவுவதால் மலேரியா நோய் பரவக்கூடிய அபாயமுள்ளது. அத்துடன் குடிநீர் பாவிக்கும்போது கொதித்து ஆறிய நீரைப் பாவிக்குமாறு பொது மக்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கொதித்து ஆறிய நீரைப் பாவிப்பதால் வாந்திபேதி நோயைக் கட்டுப்படுத்த முடிமென்றும், வீட்டைச் சூழவுள்ள பகுதிகளைச் சுத்தமாக வைத்திருக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. கண்ட இடங்களில் மலசலம் கழிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் சுகாதாரப் பகுதியினர் பொதுமக்களுக்கு வேண்டுகோள்விடுக்கின்றனர், 162-ரி

---

## ஆசிரியர் கல்விப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பம்

(மாணிப்பாய்)

ஆசிரியர் கலாசாலைகளில் 1995ம் ஆண்டு ஆசிரிய கல்விப் பயிற்சி நெறியைப் பயிலுவதற்காக ஆசிரியர்களைத்தெரிவு செய்து அனுமதிப்பதற்கு கல்வி உயர்கல்வி கல்வி அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இப்பயிற்சி நெறியானது சேவையிலுள்ள பட்டதாரிகளாய் இல்லாத பயிற்றப்படாத, ஆசிரியர்கள் கல்வி அதிகாரிகள், போதனாசிரியர்கள், ஆகியோருக்கு மாத்திரமே உரியதாகும். 31-12-1993க்கு முன்னர் ஆசிரியர் சேவைக்கு நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம், பயிலுனர் ஆசிரியர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாகாது.

இதற்கான விண்ணப்பங்களை அனுப்புவோர் இம்மாதம் 31ந் திகதிக்கு முன்னர் பிரதம ஆணையாளர் ஆசிரிய கல்விநிருவாகக்கிளை கல்வி உயர் கல்வி அமைச்சு இசுறுபாய, பத்தரமுல்ல என்னும் முகவரிக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இது பற்றிய முழுவிபரமும் 30-9-94ல் வெளிவந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது, -71-ரி

---

வேளாண் மன்னர்

## போட்டிக்கு 30ம் திகதி வரை விண்ணப்பிக்கலா

(ராழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடாத்தப்படும் வேளாண் மன்னர் தெரிவுப்போட்டிக்கு இம்மாதம் 30-ம் திகதி வரை விண்ணப்பிக்கலாம் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

முன்பு இம்மாதம் 10-ம் திகதிக்கு முன்பதாக விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டிருந்தது.

இப்போட்டியானது வடதமிழீழம் முழுவதும் சகல மாவட்டத்திலும் தனித்தனியே நெல் பயிரிடும் விவசாயிகளிடையே மழையை நம்பிய நெற் செய்கையிலும், நீர்ப்பாச்சுகை நெற்செய்கைக்யிலும் தனித்தனியாக நடாத்தப்படுவது யாவரும் அறிந்ததே.

விண்ணப்பப்படிவங்களையும் மேலதிக விபரங்களையும் உற்பத்திக் குழுக்களிலும் விவசாயத் திணைக்களங்களிலும், கமநலசேவைத் திணைக்களத்திலும் பசுமை வேளாண்சேவை நிலையங்களிலும் யெற்றுக் கொள்ள முடியும்.

---

## முறைப்பாடு தெரிவிக்க பிரதமர் விசேட ஏற்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலையடுத்து சட்டவிரோதமான சம்பவங்கள் நிகழுமானால் அவை பற்றிய முறைப்பாடுகளை அல்லது தகவல்களை பொது மக்கள் தொலைபேசி மூலம் தெரிவிப்பதற்கு வசதியாக தமது அலுவலகத்திலும் வசதி செய்யப்பட்டிருக்கும் என்று பிரதமர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் உத்தியோகபூர்வ இடங்களான பொலிஸ் தலைமை அலுவலகம், உள்ளூர் பொலிஸ் நிலையங்கள் என்பவற்றுக்குப் புறம்பாக தமது அலுவலகத்தில் இந்த வசதி அமைக்கப்படுமென்று அவர் மேலும் கூறியுள்ளார். ரி

---

## புனரமைப்பு

(பருத்தித்துறை)

புலோலி மாவில் வெள்ள வாய்க்கால் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன புலோலி கிழக்கு உற்பத்திக் குழுவினரால் சிரமதானரீதியில் திருத்திப் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. -52

### மணிவாக்கு

மாடப்புறு காக்கையோடு வாழ ஆரம்பித்தால் அதன் சிறகின் நிற கறுப்பதில்லை. அதன் மனம்மட்டும் கறுப்பாகும்,

- ஜேர்மனியபழமொழி

## நமது நோக்கு

### பாடசாலைகளில் யோகப் பயிற்சி!

இயற்கைச் சூழலிலே - பலவித கல்விக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு, காந்தரூபன் அறிவுச்சோலைப் பாடசாலை நடாத்தப்படுகின்றது.

எதிர்காலத் தமிழீழ மாணுக்கர்கள் எத்தகைய பயிற்சிகளைப் பெற்று முழு மனிதர்களாக மாற வேண்டும் என்பதற்கான பயிற்சிக்களமாக - பரிசோதனைப் பாடசாலையாக அது காட்சி தருகிறது.

உள வளர்ச்சி மாத்திரமல்ல, உடல் வளர்ச்சிக்கும் கவனம் செலுத்தப்படுகின்றது. எனவே தான், உடற் சமச்சீராக்கலுக்கும், தற்பாதுகாப்பிற்கும், துணிவ பெறவும் கராத்தேப் பயிற்சிக்கு இடமளிக்கப்பட்டிருக்கிறது.

அது மாத்திரமல்ல - யோகப் பயிற்சிக்கும் இடமளிக்கப்பட்டிருப்பது விசேட கவனத்திற்குரியது. அதன் நிர்வாகிகள் பல்வேறு கோணங்களிலிருந்து சிந்தித்திடத் திட்டமிட்டுச் செயலாற்றி வருவது தெரிகிறது.

ஞாயிறு வணக்கம் (சூரிய நமஸ்காரம்) உட்படச் சில தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசனப் பயிற்சிக்கு இடமளிக்கப்பட்டிருக்கிறது.

தன்னடக்கம், தன்னம்பிக்கை, தளராத நெஞ்சம் ஆகிய பண்டகள் வளர்க்கபபட இந்த யோகப் பயிற்சி உதவுவதாகக் காரணம் கூறபடுகிறது.

தீர்க்க முடியாத சில வியாதிகளைத் தேர்ந்தெடுக்கப்பட்ட சில ஆசனப் பயிற்சிமூலம் தீர்க்கலாம் அல்லது கட்டுப்படுத்தலாம் என்பது தான பொதுவான நம்பிக்கை.

யோகப்பயிற்சி ஒரு குறிப்பிட்ட நாட்டுக்கோ, குறிப்பிட்ட இனத்திற்கோ உரிமையான தனிச்சொத்தல்ல!

1977ல் - கல்விஅமைச்சராக இருந்த நிசங்கா விஜயரத்தின, யோகப் பயிற்சியின் நன்மைகளையும், பாடசாலைகளில் அவைக்கு உரிய இடம் அளிக்கப்பட வேண்டிய தன் அவசியத்தையும் வலியுறுத்திச் சுற்றுநிருபம் அனுப்பினுர்.

அந்தச் சுற்றுநிருபத்திற்கு என்ன நடந்தது? எத்தனை பாடசாலைகள் அதனை நடைமுறைப்படுத்தின? அப்படி ஒரு சுற்றுநிருபம் இருப்பதாக எத்தனை ஆசிரியர்களுக்குத் தெரியும்?

வழக்கம்போல - பக்குவமாக அது கோவைப் படுத்தப்பட்டிருக்கும்!

உடல், உள வளர்ச்சிக்கான பாரம்பரியக் கலைகள் பாதுகாக்கப்பட வேண்டும்?

### இன்று

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பாடசாலைகளில் பணியாற்றி ஓய்வுபெற்ற அதிபர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் வைபவம் இன்று வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்,

0 0

(கொழும்புத்துறை)

யாழ்.அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா இன்று 10ம் திகதி வியாழக்கிழமை காலை 9-30 மணிக்கு வித்தியாசாலை அதிபர் பொ. நடராசா தலைமையில் இடம்பெறும். -1 4

## பலதும் பத்தும்

### ரோஜா!

ஜவஹர்லால்நேரு தினசரி ஒரு ரோஜா மலரைச் சூடிக் கொள்வாராம்! அது ... அவருக்கு ஒருதனிக் கவர்ச்சி. ரோஜாவின் வர்ணம் எம்மை வசீகரிக்கும்; அதன் வனப்பு எம்மைச் சுண்டி இழுக்கும்; அதன் சுகந்தம் மனதிற்கு ஆறுதல் தரும்.

ஆகையால் . . ரோஜாவைப் புஷ்பராஜா என்கிறோம். ஆனல் ... மேலைநாட்டவர்கள் அதனைப் புஷ்பராணி என்கிறுர்கள். கவிகளுக்கோ ... என்னென்னவோ கற்பனைகளைக் கொடுக்கிறது!

முன்பு ... அன்பைவெளிக்காட்ட அதனைக் கொடுப்பார்கள். தற்போது. செயற்கையான ... கடதாசி ரோஜாக்கள் வந்துவிட்டன! அதனல் ... அதன் கொடுக்கல் வாங்கல்களும் வற்றிவிட்டன!

—மயூரன்

## இராசி பலன்

10 - 11 - 1994

வியாழக்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி-24)

ஸப்தமி காலை 6-07 வரை, திருவோணம் மாலை 4-45 வரை, சித்தயோகம், இராகு காலம் நண்பகல் 12-05 முதல் 1-35 வரை, சுபநேரம் காலை 7-35 முதல் 9-05 வரை,

மேடம்: வருமான உயர்வு, கௌரவம், ச. தக முயற்சி.

இடபம்: மனகுரோதம், பணமுடை, குடும்பவெறுப்பு.

மிதுனம்: கடன்பகை, சகோதர துன்பம், அலைச்சல்.

கடகம்: பொதுப்பணி, தொழில் லாபம், தெய்வ சிந்தனை.

சிங்கம்: விடாமுயற்சி, சுபகாரியம், புதிய உறவு.

கன்னி: மேலதிகாரிகள் சினம், மனக்குமுறல், யோசனை.

துலாம்: கருத்து மோதல், புத்திரர் கவலை, குடுமபபிரிவு.

விருச்சிகம்: நோய் தணியும், பணவரவு, தானதர்மம்.

தனுசு: மனவேதனை, அசாத்திய துணிவு, மனமாற்றம்.

மகரம்; தயாளசிந்தனை, உறவினர் வருகை, தெய்வீகப் பணி.

கும்பம்: தொழில் பிணக்கு. இனம்புரியாதபயம், வெறுப்பு.

மீனம்: சங்கடமான சூழ்நிலை, வீண்செலவு, வியாக்கியானம்.

— ஜோஸ்யர்

## பனையை நாட்டியவர்கள் – இப் பாரினில் உயர்ந்தவர்கள்

### கிராண்ட்பாஸ் குண்டுவெடிப்பு:
# வெடிகுண்டுப் பெண் பொலிஸில் சரணடைந்தார்!

(கொழும்பு)

காமினி திசநாயக்காவின் கொலைக்குக் காரணமாயிருந்த குண்டு வெடிப்பை நடாத்திய தற்கொலைப் பெண் எனப் பொலிஸாரும், புலனுய்வுத் துறையினரும் கூறிவந்த பெண், நேற்று முன்தினம் மருதானைபொலிஸில் சரணடைந்துள்துள்ளனராம்.

நுவரெலியாவைச் சேர்ந்த இப்பெண் சரணடைந்தபோது தம்மைப் பற்றிய முழு விபரங்களையும் பொலிஸாருக்குக் கூறியதுடன், தாம் காமினியின் ஆதரவாளர் என்றும், அவரது பல கூட்டங்களில் கலந்துகொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

காமினியின் சில கூட்டங்களில் எடுக்கப்பட்ட வீடியோப் படங்களில் இவர் காணப்படுவதாகவும், கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பை இந்தப் பெண்ணே நடாத்தியதாகவும் கூறி, இவர் பற்றிய தகவல்தருமாறு பொலிஸார் அறிவிப்புக்களை வெளியிட்டு வந்ததும் தெரிந்ததே. (சி-இ(

### தொண்டா நாடு திரும்பினுர்

(கொழும்பு)

உல்லாசப்பயணத்துறை அமைச்சர் எஸ். தொண்டமான் இந்தியாவிலிருந்து நேற்றுமுன்தினம் நாடுதிரும்பியுள்ளார்,

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அவர் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் தாம் தொழிற்சங்க தலைவர்களைச் சந்தித்து தமது எதிர்காலத்திட்டம் பற்றி விளக்கிக் கூற இருப்பதாக தெரிவித்தார். [ரி]

## நிஹால் கலப்பத்தி வாக்களிக்கவில்லை!

(கொழும்பு)

ஜே. வி. பி. யின் ஜனுதிபதி வேட்பாளரான திரு. நிஹால் கலபத்தி நேற்றைய ஜனுதிபதி தேர்தலில் வாக்களிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இவரது பெயர் வாக்காளர் இடாப்பில் இடம்பெறவில்லை என்றும் இதனுலேயே இவர் வாக்களிக்கமுடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஜனுதிபதி தேர்தலில் போட்டியிடுவதிலிருந்துஇவர் வாபஸ் பெற்றது தெரிந்ததே. சி-இ

### கிரிக்கெட்
## இந்தியா வெற்றி

(புதுடில்லி)

இந்திய மே இந்திய அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற 4வது சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வென்று போட்டித் தொடரில் வெற்றி பெற்றது.

முதலில் ஆடிய மே. இந்திய அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 251 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லாரு 89 ஓட்டங்களைப் பெற்றுர். அடுத்து ஆடிய இந்திய அணி 49.2 ஓவரில் 2 விக்கட்டுகளை மட்டும் இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றது. அஜய் ஜடேஜா 104 ஓட்டங்களையும் ரென்டுல்கர் 88 ஓட்டங்களையும் பெற்றனர். -சி

## வாக்களித்தோர் தொகை 15 வீதத்தால் குறைவு

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலை விட ஜனுதிபதித் தேர்தலில் வாக்களித்தோர் தொகை 15 வீதத்தால் குறைவடைந்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 80 வீதமானுேர் வாக்களித்திருந்தனர். ஆனல் நேற்றைய ஜனுதிபதித் தேர்தலில் 65 வீதமானுேரே வாக்களித்துள்ளனர்.

காமினி திஸநாயக்கா கொல்லப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதல் மற்றும் பரவலாக இடம்பெற்ற வன்முறைத் தாக்குதல்களாலேயே அச்சம் காரணமாக மக்கள் வாக்களிப்பில் கலந்துகொள்ளத் தயங்கியிருக்கலாமெனவும் கூறப்படுகிறது. (சி-இ)

## கட்சி பேதங்களை மறந்து அமைதி காப்போம்

### ரணில் வேண்டுகோள்

(கொழும்பு)

''ஜனுதிபதி தேர்தல் முடிவடைந்ததும் அனைவரும் கட்சி பேதஙகளை மறந்து நாட்டில் சட்டங்களுக்கு மதிப்பளித்து நடக்கவேண்டும்''

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று இலங்கை வானெலி மூலம் விடுத்த அறிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது: மக்கள் அளிக்கும் தீர்ப்பை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ளவேண்டும். அரசியல் லாபத்துக்காக மக்களை திசை திருப்பி நாட்டின் ஒற்றுமைக்கு பங்கம் ஏற்படுத்தக்கூடாது. தேர்தல் முடிவடைந்ததும் நாம் கட்சி பேதங்களை மறந்து நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட ஒத்துழைப்பு வழங்கவேண்டும், எனறும குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளையில் நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவ அனைத்து மக்களும் ஒத்தாசைகளை வழங்கவேண்டும், என்று அனைத்து மதத்தலைவர்களுய வேண்டுகோள விடுத்துள்ளனர், (வி-இ)

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994–11–10

வியாழன் இரவு

- 08-01 சொல்லுங்கள் பார்க்கலாம்
- 08-10 சித்த மருத்துவ குறிப்புகள்
- 08-20 உழைப்போம் உயர்வோம்- நிகழ்ச்சியில் 'கட்டடம்கட்டுவோம்' குறுநாடகம்
- 08-30 செய்திகள்
- 08-40 ஏட்டிலிருந்து- தமிழில் சிறுகதையின் தோற்றமும், வளர்ச்சியும் என்ற நூலிலிருந்து ''இலங்கையில் தமிழ் சிறுகதை" எனும் கட்ரையின் சில பகுதிகள்
- 08-50 மலரும் மொட்டுக்ககள்
- 09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

1994–11–11

வெள்ளி காலை

- 07-02 மாவீரவணக்கம்
- 07-30 செய்திகள்
- 07-35 பத்திரிகைச் செய்திகள்
- 07-40 தொடர்ந்து மாவீர வணக்கம்
- 08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

## கடும் பாதுகாப்புடன் தேர்தல் நடந்தது

(கொழும்பு)

கடும் பாதுகாப்புக்கு மத்தியில் ஜனுதிபதித் தேர்தல் நேற்று நடைபெற்றது.

ஜனுதிபதி தேர்தல் பிரசார காலத்தின்போது வன்முறைகளும், குண்டுவெடிப்புகளும், அரசியல்வாதிகளின் கொலைகளும் இடம்பெற்றதால், தேர்தல் சமயத்தில் இத்தகைய அசம்பாவிதங்களைத் தடுக்கும் விதமாகவே நேற்று கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

22 தேர்தல் மாவட்டங்களில் ஒன்பது மணித்தியாலயங்கள் நேற்று வாக்களிப்பு நடைபெற்றது.

வாக்காளரின் பாதுகாப்பு கருதி 40 ஆயிரம் பொலிஸார் வரை பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர், (இ)

### குண்டு வெடிப்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளார். இவர் விஜேகுமாரணதுங்காவோடு சேர்ந்து ஸ்ரீ வங்கா மகாசன கட்சியை ஆரம்பித்தார். 1988ம் ஆண்டில் ஜனுதிபதி தேர்தலிலும் இவர் போட்டியிட்டது குறிப்பிடத்தக்கது.

குண்டுவெடிப்பில் படுகாயமடைந்த ஒஸி கடந்த சில வாரங்களாக கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் அதிதீவிரசிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவந்தார். தலையில் படுகாயமடைந்த இவருக்கு இரு தடவைகளுக்கு மேல் சத்திர சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டன. (ம-இ]

# ஸ்ரீமாவுக்கேவெற்றி ரணில் நம்பிக்கை

(கொழும்பு)

ஜனதிபதித் தேர்தலில் எமது கட்சியின் வேட்பாளர் திருமதி ஸ்ரீமா திஸநாயக்கா வெற்றி பெறுவார் என்பது உறுதி.

எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு கறுவாத்தோட்டம் பகுதியிலுள்ள வாக்களிப்பு நிலையத்தில் தமது வாக்கைப் பதிவுசெய்த பின்னர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாம் தேர்தலில் போட்டியிடுவது வெற்றி பெறுவதற்காகவே அதனல் நாம் வெற்றி பெறுவோம் என்ருர். (இ)

# சர்வதேச அவதானிகள்குழு தீவகம் சென்றது

[கொழும்பு]

ஜனதிபதித் தேர்தலைப் பார்வையிட இலங்கை வந்துள்ள சர்வதேச அவதானிகள் குழு நேற்று யாழ். மாவட்ட தீவகப்பகுதிகளுக்கும் சென்று தேர்தல் பதிவுகளைப் பார்வையிட்டது.

நேற்றுக்காலை மேற்படி குழுவின் சில பிரதிநிதிகள் விசேட விமான மூலம் யாழ்ப்பாணம், வவுனியா. திருமலை, மட்டுநகர். அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கும் சென்று தேர்தல் நிலைமைகளை மிக உன்னிப்பாக அவதானித்துச் சென்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (வி-இ)

# குழப்பம்'ஏற்படுத்த தீய சக்திகள் முயற்சி

(கொழும்பு)

தெற்கில் தீயசக்திகள் பரப்பி வரும் வதந்திகளை மக்கள் நம்பவேண்டாமென்றும் இவற்றில் எதுவித உண்மையுமில்லையென அரசு அறிவித்துள்ளது,

வடக்கிலும். மட்டக்களப்பிலும் விடுதலைப்புலிகள் நேற்று படை முகாம்கள் மீது பாரிய தாக்குதல்களை நடாத்தியதாக தெற்கில் பல பகுதிகளிலும் வதந்திகள் பரப்பப்பட்டுள்ளனஇதில் எதுவித உண்மையுமில்லை எனவும் அரசு கூறியுள்ளது

இவ்வாறு வதந்திகளை பரப்பி நாட்டில் வன்முறை, குழப்பங்களை ஏற்படுத்த இத் தீய சக்திகள் முயல்வதாகவும் இவர்கள் விடயத்தில் மக்கள் கவனமாயிருக்க வேண்டுமெனவும் அரசு கேட்டுள்ளது. (வி-இ)

# கத்திக் குத்தில் ஒருவர் காயம்

[கொழும்பு]

மாத்தறை பகுதியிலுள்ள வாக்களிப்புநிலையம் ஒன்றில் ஏற்பட்ட மோதலில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி காயமடைந்தார்,

இதேவேளையில் நேற்று தேர்தல் சமயத்தில்பல இடங்களில் வன்முறைகள் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் மாத்தறையில் தேர்தல் அதிகாரி உபசேன தேர்தல் நேரத்தில் மாரடைப்பால் உயிரிழந்ததாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. கே-இ

# தேர்தல் மிரட்டல்கள் கெடுபிடிகள் குறைவு

(கொழும்பு)

இலங்கையில் இதுவரை நடைபெற்றதேர்தல்களை விட இம்முறை நடைபெற்ற ஜனதிபதி தேர்தலில் மிரட்டல்கள், கெடுபிடிகள் மிகக்குறைவாகவே இருந்ததாக இத்தேர்தலை கண்காணித்த அதிகாரபூர்வமற்ற குழுக்கள் தெரிவித்ததாக பி. பி. ஸிகூறியது.

ஆங்காங்கே வன்முறைகள் வெடித்த போதிலும்முன்னைய ஆட்சிசகாலத்திலிருந்த தேர்தல் மிரட்டங்களும், கெடுபிடி நடவடிக்கைகளும் குறைவாக இருந்ததை அவதானிக்கக் கூடியதாயிருந்தது.

தமக்கு கிடைத்த தகவல்களும் இதனை ஊர்ஜிதப்படுத்துவதாகவும் அக் குழுக்கள் தெரிவித்துள்ளன. சி-இ

## ஊரடங்கு

[1ம் பக்கத் தொடர்ச்சி[

யிலிருந்து அமுலுக்கு கொண்டுவரப்பட்டு நாளை வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு நீக்கப்படும். அவசியம் ஏற்படின் மீண்டும் ஊரடங்கு சட்டம் மேலும் அமுலுக்கு கொண்டு வருவது பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

ஊரடங்கு உத்தரவை கண்டிப்பாக அமுல்செய்யுமாறு பொலிசாருக்கும் பாதுகாப்பு படையினருக்கும் விசேட பணிப்புரைகள் விடுக்கப்பட்டுள்ளன,

ஊரடங்குச் சட்டம் அமுலில் இல்லாதவேளையிலும் ஊர்வலங்கள் நடத்துவதற்கு அனுமதிக்கப்படமாட்டாதெனவும். இது மறுஅறிவித்தல் வரை அமுலில் இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கே-இ

## தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் நாளை 11-ந் திகதி வெள்ளிக்கிழமை .முற்பகல் 9-05மணிக்கு தமிழ்விழா செல்வன் த. டிபதாசன் தலைமையில் நடைபெறும். முதன்மைவிருந்தினர் வித்துவான் க. சொக்கலிங்கம் கலந்துகொள்வார்.

## இராணுவ

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கொல்லப்பட்டதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை இந்த முகாமின் சுற்றுப்புறத்தில்கடுமையானபீரங்கித் தாக்குதல் நடாத்தியதாகவும்இராணுவத்தினர் புலிகளை பக்கவாட்டில் தாக்க முயற்சித்தபோது ஒரு இராணுவ அதிகாரியும் 3 சிப்பாய்களும் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று முன்தினம் வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் பாரிய கப்பலொன்றைக் கரும்புலிகள் தாக்கி பலத்த ேசதமடையச் செய்ததும் குறிப்பிடத்தக்கது. (சி-இ)

## தேர்தல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியில் குறிப்பிட்டார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது, நாட்டில் அச்சம் நீக்கப்பட்டு, அமைதியை ஏற்பத்டு புதிய பாதையில் செல்வதற்கு உறுதிமொழியை வழங்கி தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்தது,

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் அச்சநிலையை ஒழித்து தேர்லுக்குப் பின்னர் இடம்பெறக் கூடிய வன்முறைகளில் இருந்து அப்பாவி மக்களைப் பாதுகாத்துக் கொள்ள நடவடிக்கைகளை எடுத்திருந்தது என்ருர்.

## வடக்கில்

(1 ம் பக்கத்தொடர்ச்சி)

நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய இறுதி உரையின் போது குறிப்பிட்டார்.

தமது உரையில் அவர் மேலும் கூறியதாவது வடபகுதியில் நெடுங்காலமாக நிலவிவரும் அமைதியின்மை எமது நாட்டின் ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலிவாங்கி உள்ளது. சொத்துக்களுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

நியாயமான அடிப்படை ஒன்றின் மூலம் இந்தப்பிரச்னைக்கு தீர்வுகாண இணங்குவார்களாயின் மிகக் கசப்பான கருத்து வேறுபாடுகளை கூட சிநேகபூர்வமாகக் தீர்த்து வைக்க முடியும்.

ஏனைய வழிகளைபுறக்கணித்து விட்டு ஒரு தனி வழியை மட்டும் பின்பற்றுவது புத்திசாலித்தனமான செயலல்ல, சில வழிகள் பயனளிக்காது போகும் பட்சத்தில் மாற்று வழிகளை பின்பற்றக் கூடிய சாத்தியம் இருக்க வேண்டும்.

வடபகுதி யுத்தம் முடிவுக்கு வந்தால் இலங்கை மக்கள் சமாதானமும் அமைதியும் சுபீட்சமிக்க யுகமொன்றை நம்பிக்கையுடன் எதிர்பார்க்க முடியும். இலங்கையின் ஐக்கிய இறைமை ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பேணுவதற்கு அது உதவும் என்ருர். ம-இ

## ஜனதிபதியான

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தமது வாக்கைப்பதிவு செய்வதற்காக பிரதமர் நீல நிற ஆடை அணிந்து வந்திருந்தார்.

இலங்கை விமானப்படையின் ஹெலிகொப்டர் ஒன்றில் அவர் அத்தனகல்லைக்கு வாக்களிக்க வந்திருந்தார்.

வாக்களித்த பின் பிரதமர் மேலும் தெரிவித்தாவது:

தேர்தலில் நான் வெற்றி பெறுவது பற்றி எந்தவித சந்தேகமும் இல்லை. 10 லட்சத்துக்கும் அதிகமான மேலதிக வாக்குகள் எனக்குக் கிடைக்குமென நான் எதிர்பார்க்கிறேன் என்ருர்.

# இதுவரை வெளியான முடிவுகள்

மாத்தறை மாவட்டம்

மாத்தறைத் தொகுதி

| | |
|---|---|
| சந்திரிகா | 2,503 |
| ஸ்ரீமா | 15,751 |
| ஹரிச்சந்திர | 205 |
| ஹட்சன் | 152 |
| ரணசிங்க | 138 |
| கலபத்தி | 123 |

அநுராதபுரம் மாவட்டம்

மிகிந்தலை தொகுதி

| | |
|---|---|
| சந்திரிகா | 19,987 |
| ஸ்ரீமா | 10,541 |
| ஹட்சன் | 261 |
| கலப்பத்தி | 91 |
| ஹரிச்சந்திர | 86 |
| ரணசிங்க | 66 |

பதுளை மாவட்டம்

பதுளைத் தொகுதி

| | |
|---|---|
| சந்திரிகா | 17,416 |
| ஸ்ரீமா | 10,210 |
| ஹட்சன் | 255 |
| ஹரிச்சந்திர | 182 |
| ரணசிங்க | 104 |
| கலபத்தி | 76 |

தபால் வாக்களிப்பு

திருகோணமலை

மாவட்டம்

| | |
|---|---|
| சந்திரிகா (பொ.ச.மு) | 2701 |
| ஸ்ரீமா (ஐ.தே.க.) | 1,146 |
| ஹட்சன் (சுயே) | 16 |
| கலப்பத்தி (ஜே.வி.பி.) | 08 |
| ஹரிச்சந்திர (பூமிபுத்திர) | 08 |
| ரணசிங்க (சுயே) | 02 |

நுவரெலியா மாவட்டம்

| | |
|---|---|
| சந்திரிகா | 3,696 |
| ஸ்ரீமா | 2,707 |
| ஹரிச்சந்திர | 32 |
| கலப்பத்தி | 10 |
| ரணசிங்க | 10 |
| ஹட்சன் | 63 |

மாத்தறை மாவட்டம்

| | |
|---|---|
| சந்திரிகா | 5,874 |
| ஸ்ரீமா | 2,351 |
| ஹரிச்சந்திர | 57 |
| ரணசிங்க | 33 |
| கலப்பத்தி | 30 |
| ஹட்சன் | 03 |

பதுளை மாவட்டம்

| | |
|---|---|
| சந்திரிகா | 6,239 |
| ஸ்ரீமா | 3,355 |
| ஹரிச்சந்திர | 62 |
| கலப்பத்தி | 37 |
| ரணசிங்க | 20 |
| ஹட்சன் | 09 |

அநுராதபுரம் மாவட்டம்

| | |
|---|---|
| சந்திரிகா | 7,466 |
| ஸ்ரீமா | 4,099 |
| ஹரிச்சந்திர | 60 |
| கலப்பதி | 40 |
| ஹட்சன் | 23 |
| ரணசிங்க | 18 |

மொனருகலை மாவட்டம்

| | |
|---|---|
| சந்திரிகா | 2,349 |
| ஸ்ரீமா | 1,268 |
| கலப்பத்தி | 22 |
| ஹரிச்சந்திர | 20 |
| ரணசிங்க | 07 |
| ஹட்சன் | 05 |

காலி மாவட்டம்

| | |
|---|---|
| சந்திரிகா | 9.176 |
| ஸ்ரீமா | 4,320 |
| ஹரிச்சந்திர | 82 |
| கலப்பத்தி | 63 |
| ரணசிங்க | 33 |
| ஹட்சன் | 14 |

பொலநறுவை மாவட்டம்

| | |
|---|---|
| சந்திரிகா | 2,286 |
| ஸ்ரீமா | 1,336 |
| கலப்பத்தி | 16 |
| ஹரிச்சந்திர | 13 |
| ரணசிங்க | 09 |
| ஹட்சன் | 07 |

வன்னி மாவட்டம்

| | |
|---|---|
| சந்திரிகா | 989 |
| ஸ்ரீமா | 156 |
| ரணசிங்க | 02 |
| கலப்பத்தி | 01 |
| ஹரிச்சந்திர | 01 |
| ஹட்சன் | 01 |

கண்டி மாவட்டம்

| | |
|---|---|
| சந்திரிகா | 10,597 |
| ஸ்ரீமா | 6,881 |
| ஹரிச்சந்திர | 102 |
| கலப்பத்தி | 45 |
| ரணசிங்க | 38 |
| ஹட்சன் | 21 |

குருநாகல் மாவட்டம்

மாவத்தகம தொகுதி

| | |
|---|---|
| சந்திரிகா | 28,057 |
| ஸ்ரீமா | 16,635 |
| ஹட்சன் | 348 |
| ஹரிச்சந்திரா | 177 |
| ரணசிங்க | 124 |
| கலப்பத்தி | 120 |

கண்டி மாவட்டம்

குண்டசாலை

| | |
|---|---|
| சந்திரிகா | 24,150 |
| ஸ்ரீமா | 18,243 |
| ஹட்சன் | 285 |
| ஹரிச்சந்திர | 238 |
| ரணசிங்க | 122 |
| கலப்பத்தி | 102 |

மாத்தறை மாவட்டம்

தெவிநுவர

| | |
|---|---|
| சந்திரிகா | 30,817 |
| ஸ்ரீமா | 14,824 |
| கலப்பத்தி | 197 |
| ஹட்சன் | 185 |
| ஹரிச்சந்திர | 185 |
| ரணசிங்க | 169 |

மாத்தளை மாவட்டம்

தம்புள்ள

| | |
|---|---|
| சந்திரிகா | 37899 |
| ஸ்ரீமா | 22,746 |
| ஹட்சன் | 602 |
| ஹரிச்சந்திர | 273 |
| கலப்பத்தி | 229 |
| ரணசிங்க | 187 |

பதுளை மாவட்டம்

ஊவாபரணகம

| | |
|---|---|
| சந்திரிகா | 20,307 |
| ஸ்ரீமா | 16,031 |
| கலப்பத்தி | 141 |
| ஹரிச்சந்திர | 134 |
| ரணசிங்க | 129 |
| ஹட்சன் | 120 |

மாத்தறை மாவட்ட

வெலிகம தொகுதி

| | |
|---|---|
| சந்திரிகா | 34,583 |
| ஸ்ரீமா | 16,708 |
| ஹட்சன் | 201 |
| ஹரிச்சந்திர | 173 |
| கலப்பத்தி | 172 |
| ரணசிங்க | 145 |

மாத்தறை மாவட்டம்

அக்குறஸ்ஸ தொகுதி

| | |
|---|---|
| சந்திரிகா | 32, 632 |
| ஸ்ரீமா | 18,162 |
| ஹட்சன் | 327 |
| கலபத்தி | 211 |
| ஹரிச்சந்திர | 175 |
| ரணசிங்க | 145 |

கண்டி மாவட்டம்

கலகெதர தொகுதி

| | |
|---|---|
| சந்திரிகா | 17,288 |
| ஸ்ரீமா | 14,862 |
| ஹட்சன் | 201 |
| ஹரிச்சந்திர | 118 |
| ரணசிங்க | 35 |
| கலப்பத்தி | 61 |

களுத்துறை மாவட்டம்

பாணந்துறை தொகுதி

| | |
|---|---|
| சந்திரிகா | 42,951 |
| ஸ்ரீமா | 20,032 |
| ஹரிச்சந்சதிர | 340 |
| ரணசிங்க | 198 |
| ஹட்சன் | 166 |
| கலப்பத்தி | 161 |

கண்டி மாவட்டம்

தெல்தெனிய தொகுதி

| | |
|---|---|
| சந்திரிகா | 14,309 |
| ஸ்ரீமா | 10,742 |
| ஹட்சன் | 238 |
| ஹரிச்சந்திர | 92 |
| ரணசிங்க | 90 |
| கலப்பத்தி | 85 |

# திரிசூல பத்திரிகை ஆசிரியர் கைது

(கொழும்பு)

'திரிசூல' என்ற சிங்களப் பத்திரிகையின் ஆசிரியர் திலக்வேஹல்ல பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

எனினும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின்கீழ் அவர் மீது இப்போது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இனவாதத்தைக் கிளப்பும் விதத்தில் திரிசூல பத்திரிகையில் கருத்துக்கள் வெளியிடப்பட்டதாக குற்றஞ்சுமத்தியே அதன் ஆசிரியர் கைதுசெய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு நவம்பர் மாதம் 10-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Nomber B/16336/B